*World Christian Fellowship*
*60, High Worple, Rayners Lane, Harrow*
*Middlesex, HA2 9SZ, United Kingdom*
*Tel: +44 208 429 9292*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# செப்பனியாவின் புத்தகம்

**பொருளடக்கம்** : *இந்த தீர்கச்தரிசனங்களுக்கு ஆசிரியர் செப்பனியா. இவரது பெயரின் பொருள், "தேவனால் பாதுகாக்கப்பட்டவர்" அல்லது "தேவன் மறைத்துக்கொண்டார்" என்பதாகும்.*

**எழுதிய வருடம்** : *இராஜாவகிய யோசியாவின் ஆட்சி காலத்தில் கி.மு 635 லிருந்து கி.மு 625-ற்குள் இந்த புத்தகம் எழுதப்பட்டது.*

*தன்னுடைய வம்சம் எசேக்கியா(Hezekiah) (715 - 686 கி.மு.) இராஜாவின் வம்சம் என்று செப்பனியா அறிந்திருந்தார். அவர் இராஜ வம்சவழியில் பிறந்திருந்தபடியினால் இராஜாக்களிடம் அணுகுவதற்கு அவருக்கு மிகவும் எளிதாக இருந்தது. ஆகவேதான் யூதாவின் இராஜாவான யோசியாவிடம் செப்பனியா பேச முடிந்தது (640-609 கி.மு.).*

*ஜனங்களின் நடத்தைகள் மற்றும் ஆவிக்குரிய நிலைமைகளை குறித்து இந்த புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை பார்க்கும்போது இது யோசியாவின் சீரமைப்பு காலத்திற்கு முன் சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அந்நாட்களில் யூதா தேசம் விக்கிரக வழிபாட்டிலும் பொல்லாத தீய காரியங்களிலும் மூழ்கியிருந்தது. பின்னர் யோசியா(Josaiah) ராஜா தேசத்தை சீரமைத்தார். யோசியா,*

*பாகாலின் பலிபீடங்களை கிழித்தெறிந்து கள்ளத்தீர்க்கதரிசிகளின் எழும்புகளை சாம்பலாக்கி, அவர்களால் செதுக்கப்பட்ட விக்கிரகங்களை உடைத்துப் போட்டான். இது கி.மு. 628ல் நடந்தது (2 நாளாகமம் 34:3–7).*

*கி.மு.622ல் நியாயப்பிரமாண புத்தகம் கண்டுப்பிடிக்கப்பட்டது (2 நாளாகமம் 34:8–35:19). அதன் விளைவாக, கிமு 635–625 களில் செப்பனியா இந்த தீர்கதரிசனத்தை உரைத்தார். செப்பனியாவும் எரேமியாவும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள்.*

## வரலாற்று பின்னணி:

*அசீரிய சாம்ராஜ்யத்தின் தலைமையகமான நினிவே தன்னுடைய வலிமையை கொஞ்சம் கொஞ்சமாக பாபிலோனியரிடம் இழக்க ஆரம்பித்தது. இவ்வாறாக யூதா தேசம் முதன்முறையாக தன்னுடைய எதிரிகளிடமிருந்து சுதந்திரத்தை அனுபவித்தது. யோசியா தன்னுடைய சுதந்திரத்தை அனுபவித்ததோடுகூட வரியும் விதித்து மிகவும் செழிப்படைந்தான்.*

*கி.மு. 609 ல் நினிவேயிடமிருந்து அசீரியா தப்பி ஓட முயற்சித்தபோது அதற்கு யோசியாவும் உதவி செய்யவும் முன்வந்தான். (2 நாளாகமம் 35:20-27).*

*ஆவிக்குரிய வகையில் யோசியா, எசேக்கியாவின் குமாரனாகிய மனாசேயின் பேரன். எசேக்கியா 55 வருடம் வரை அரசாண்ட பின் பொல்லாதவனாகிய அவனது மகன் ஆமோன் இரண்டு வருடம் (642-640 கி.மு) மாத்திரம் இராஜ்யபாரம் பண்ணினான் (2 இராஜாக்கள் 21:2 மற்றும் 2*

*நாளாகமம் 33). யோசியா தனது முற்பிதாக்களிடம் கற்றுக்கொண்டபடி அவனுடைய ஆரம்ப ஆட்சிகாலமும் பொல்லாதவையாகவே இருந்தது (2 இராஜாக்கள் 23:4). அந்த பொல்லாப்பினிமித்தம் மனாசே சங்கிலிகளினால் கட்டப்பட்டு பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டான். அங்கே சிறையில் அவன் மனந்திரும்பியதனால் திரும்பவும் தன்னுடைய ஆட்சியில் அமர்த்தப்பட்டான். அந்த ஆட்சியின்போது, தன்னுடைய பாவம் நிறைந்த ஆட்சி காலத்தில் நடந்த சில பிரச்சனைகளை சரி செய்ய முயற்சி செய்தான். முடிவிலே, முழுவதுமாக சரியாகாவிட்டாலும் குறைந்த அளவில் ஒரு எழுச்சி அல்லது மறுமலர்ச்சி நிகழ்ந்தது.*

*கி.மு. 622 ல், யோசியாவின் காலத்தில் தேவனுடைய ஆலயத்தை பழுதுபார்த்து கொண்டிருந்தபொழுது இல்க்கியா என்னும் பிரதான ஆசாரியன் நியாயபிரமாண புஸ்தகத்தை கண்டுபிடித்தான். (2 இராஜாக்கள் 22:8).*

*யோசியா நியாயபிரமாண புஸ்தகத்தை வாசித்த பொழுது, ராஜ்ஜியத்தை விரிவாக சீரமைக்கும் காரியங்களை ஆரம்பித்து வைத்தான் (2 இராஜாக்கள் 23). இந்த சமயத்தில் தான் இராஜாவோடும் ஜனங்களோடும் பேசுவதற்கு தேவன் செப்பனியா தீர்க்கதரிசியை எழுப்பினார்.*

*யோசியாவின் தாயான எதிதாள் அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு கருவியாக இருந்தாள். (2 இராஜாக்கள் 22:1)*

*கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறதென்று செப்பனியா யுதாவிற்கு எச்சரிப்பு விடுத்தார். தெய்வீகமான நியாயத்தீர்ப்பு இராஜாவான நேபுகாத்நேச்சாரின் கைகளிநிமித்தம் வருகிறது. 605-586 கி.மு. (1:4-13)*

எரேமியாவும் செப்பனியாவும் தங்களுடைய ஊழியத்தை யோசியாவின் நாட்களில் தொடங்கினார்கள். இவர்களில் யாரேனும் ஒருவர் யோசியாவோடு ஆரம்பத்தில் அவன் உருவான கால முதல் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்.

## நோக்கம் :

யூதா தேசம், 55 வருட காலமாக மனசேயினால் ஆட்சிசெய்யப்பட்டது. எசேக்கியா இராஜாவின் கடைசி காலங்கள் பொல்லாதவைகளாக இருந்தபடியினால் அதன் விளைவாக அந்த தேசம் கொஞ்ச காலம் பொல்லாத இராஜாக்களினால் ஆட்சிசெய்யப்பட்டது. அது மக்களிடையே பெரிய தாக்கத்தை உண்டுபன்னினது

அதனால், தீர்க்கதரிசி செப்பனியாவை தேவன் எழுப்பி அகில உலகத்திற்கும், யூதா தேசத்திற்கும், அதன் சுற்றியுள்ள தேசங்களுக்கும், எருசலேமிற்கும் மற்றும் சகல தேசங்களுக்கும் வரும் நியாயத்தீர்ப்பை அறிவித்தார். இதை தொடர்ந்து சகல தேசங்களுக்கும் தேவனின் ஆசீர்வாதம் அறிவிக்கப்பட்டது, குறிப்பாக யூதாவில் மீதமுள்ள நீதிமான்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் அறிவிக்கப்பட்டது.





**சுருக்கம்** :

*இந்த புஸ்தகம் "கர்த்தருடைய வசனம்" என்று ஆரம்பித்து "கர்த்தர் சொல்லுகிறார்" என்று முடிவடைகிறது.*

*செப்பனியாவுக்கு வெளிப்படையாக (பட்டவர்த்தனமாக) பேச தைரியம் இருந்தது. ஏனென்றால் அவர் கர்த்தருடைய வார்த்தையை அதிகார பூர்வமாக தெரிவிக்கிறோம் என்று அறிந்திருந்தார். மேலும் அவர்கள் ஆராதித்த எந்த தேவர்களாலும், அசீரியரின் வலிமையான சேனையாலும்கூட இந்த ஜனங்களை காப்பாற்ற முடியாது என்பதையும் அவர் அறிந்திருந்தார்.*

தேவன் இரக்கமும் கருணையும் நிறைந்தவர், ஆனால் அவருடைய எல்லா எச்சரிக்கைகளை புறக்கணிகும்போது, அவருடைய நியாயதீர்ப்பை நிச்சயம் எதிர்பார்க்கலாம். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாளை குறித்து வேதவாக்கியங்களில் மிகவும் அதிகமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசிகள் அதை ''கர்த்தருடைய நாள்'' என்று அழைக்கிறார்கள். எருசலேமின் வீழ்ச்சி முதலிய பலவிதமான நிகழ்வுகள் கர்த்தருடைய நாளின் நிறைவேறுதல் என்று தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒவ்வொறு தீர்க்கதரிசனமும் கர்த்தருடைய இறுதி நாளை சுட்டிக்காட்டுகிறது.




இந்த புஸ்தகத்தின் ஆசிரியர் ''கர்த்தருடைய நாள்'' என்பதை குறித்து பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளை

*எல்லோரை காட்டிலும் மிகவும் அதிகமாக அறிவித்திருக்கிறார். இந்த நாளை குறித்து:*

- *கடுங்கோபம்,*
- *பிரச்சனை,*
- *துன்பம்,*
- *பேரழிவு,*
- *பற்கடிப்பு,*
- *இருள்,*
- *தனிமை,*
- *மப்பும் மந்தாரமுமான,*
- *எக்காளம் ஊதுகிறதும் மற்றும்*
- *எச்சரிப்பின் (1:15,16,18) நாளுமான இந்த நாள் சமீத்திருக்கிறது (1:7) என்று விவரிக்கிறார்.*

*தேவனுடைய கோபம் தேவ வார்த்தைகளில் இன்னும் வெளிப்பட்டாலும், அவருடைய நியாயத்தீர்ப்புக்கு மறைக்கடும்படி ஜனங்கள் ஆண்டவரை நோக்கி பார்க்க வேண்டும் என்று தீர்க்கதரிசி கெஞ்சினார் (2:3). அதோடு, மீதமுள்ள தேவனுடைய விசுவாசிகளுக்கு இறுதியில் இரட்சிப்பு உண்டென்றும் வாக்குத்தத்தமாக அறிவித்தார் (2:7; 3:9–20).*

*"நான் அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" (3:9) என்னும் இந்த வாக்கியம், பாபேல் கோபுரம் கட்டப்பட்ட காலத்தில் ஒரே பாஷையாக இருந்ததுபோல திரும்பவும் பொதுவான பாஷையை நிலைநாட்டுவார் என்று அறிவிக்கிறது (ஆதியாகமம் 11:1–9). இந்த "பாஷை" என்கிற*

*வார்த்தையை ஆதியாகமம் 11:7லிலும் உபயோகப்படுத்தியிருப்பதாக குறிப்பிடுகிறார்கள்.*

*இந்த நியாயத்தீர்ப்பின் பாதை, வாழ்க்கையையும் இருதயத்தையும் பரிசுத்தப்படுத்துவதற்கு வழிகாட்டுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது செப்பனியா 3:13 வசனம் நமக்கு உறுதிப்படுத்துகிறது. செப் 3:13ஐ ஆதாரமாக வைத்து, "பாஷை" என்கிற வார்த்தை பொதுவாக "உதடு / நாவு / வாய்" என்றும் வழங்கப்படுவதை நாம் உறுதி செய்யலாம்.*

*ஏசாயா 6:5ல், நாவோடு "சுத்தம்" இணையும்போது உள்ளான தூய்மையாகுதல் நடைபெறுவதை நாம் காணலாம். இயேசு மத்தேயு 12:34ல் குறிப்பிட்டது போல இந்த சுத்தம் நம்முடைய பேச்சில் வெளிப்படும். ஓசியா 2:17, சொல்லுகிறது மற்ற தேவர்களுடைய நாமங்கள் அவர்களுடைய உதடுகளிலிருந்து நீக்கப்படும் என்பைதை உறுதிப்படுத்துகிறது. இதன்மூலம் இங்கு "ஒரே உலக மொழி" என்று குறிப்பிடப்படவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.*

*செப்பனியாவின் தீர்க்கதரிசனத்திற்கு பின்பு யூதாவின் இராஜாவான யோசியா தேசத்திற்கு ஒரு சீர்த்திருத்தத்தை கொண்டு வந்தான். அதன் பிறகு அவன் மனதிலே பெருமை நிலைகொண்டது, அவனுடைய சீர்த்திருத்தம் மிகவும் தாமதமாக இருந்ததினால் அவனுடைய வாழ்நாட்கள் வரை கூட அந்த சீர்திருத்தங்கள் நீடித்திருக்கவில்லை.*

***புத்தகத்தின் சுருக்கம்*** *:*

## ***தேவனுடைய நியாயத்தீர்ப்பு (1:2–3:8)***

- *பூமி முழுவதின் மேல் தேவ நியாயத்தீர்ப்பு (1:2, 3)*
- *யூதாவின் மேல் நியாயத்தீர்ப்பு (1:4–2:3)*

## ***மீதியானவர்களுக்கு நம்பிக்கை (2:1-3)***

## ***சுற்றியுள்ள தேசங்களுக்கான தண்டனை (2:4–15)***

1. *பிலிஸ்தியா - Philistia (2:4–7)*
2. *மோவாப் / அம்மோன் - Moab/Ammon (2:8–11)*
3. *எத்தியோப்பியா - Ethiopia (2:12)*
4. *அசீரியா - Assyria (2:13–15)*
5. *எருசலேமின் மேல் - On Jerusalem (3:1–7)*
6. *சகல தேசங்களின் மேல் - On All Nations (3:8) ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று* ***கர்த்தர்*** *சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிரகோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்.*

## ***மீதமுள்ளவர்களின் இராஜ்யத்தின் மேல் கர்த்தருடைய ஆசீர்வாதம். (3:9–20)***

- *தேசங்களுக்கான மறுசீரமைப்பு (3:9, 10)*
- *யூதாவின் மறுசீரமைப்பு (3:11–20)*

## ***மீதமுள்ள நீதிமான்களுக்கு செப்பனியா கூறும் நம்பிக்கை:***

- *அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்களுடைய பாவத்திலிருந்து கழுவப்பட்டார்கள். (3:9, 11, 13).*
- *தெய்வீக நியாயத்தீர்ப்பிலிருந்தோ அல்லது அதன் மூலமாகவோ விடுவிக்கப்-படுவார்கள். They will be delivered from or through divine judgment (2:1-3)*
- *இறுதியில் தங்களை ஒடுக்குகிறவர்களின் கைகளிலிருந்து மீட்கப்படுவார்கள். They will eventually be rescued from the hand of their oppressors (2:4-15; 3:15).*
- *வருங்காலத்திலே அவர்களுக்கான ஆசீர்வாதங்களை குறித்த நம்பிக்கை இருக்கிறது. They have the hope of future blessings (2:6-9).*
- *அவர்களுக்கு கீர்த்தியும் புகழ்ச்சியும் உண்டாயிருக்கும். They will be given fame and honour (3:19-20).*
- *பாதுகாப்பையும் சமாதானத்தையும் அனுபவிப்பார்கள். They will enjoy security and peace (3:13).*

*அவர்கள் கர்த்தருடைய சமூகத்தில் அமர்ந்து மகிழுவார்கள். அவர் தம்முடைய அன்பினிமித்தம் அவர்களில் களிகூருவார். (3:15-17).*

## *முக்கிய வசனங்கள் :*

***செப்பனியா** 1:18, "**கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும், தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம்பண்ணுவார்.**"*

***செப்பனியா 2:3, "தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்.***

***செப்பனியா** 3:17, "**உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்**; **அவர் வல்லமையுள்ளவர்**, **அவர் இரட்சிப்பார்**; **அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து**, **தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்**; **அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார் (மகிழ்வுடன் பாடுவார்).***

## *முடிவுரை :*

*தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கும் அவருடைய ஆசீர்வாதத்திற்கும் உள்ள சம்பந்தத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?*

*தேவ நியாயத்தீர்ப்பும் ஆசீர்வாதமும் ஒன்றுக்கொன்று எதிரானவை, இவ்விரண்டிற்கும் சம்பந்தம் இல்லை என்று பலர் நினைக்கிறார்கள். அதோடுகூட "எனக்கு அவ்வளவு நியாயத்தீர்ப்பு இல்லை, எனது எதிரிக்குத்தான் அதிக நியாயத்தீர்ப்பு" என்றும் நினைக்கிறார்கள். அதே வேளையில், தேவனுடைய ஆசீர்வாதங்களும் இரட்சிப்பும் தங்களுக்குரியது, இதற்கும் நியாயத்தீர்புக்கும் சம்பந்தம் இல்லை என்று நினைப்பதில் திருப்தியடைகிறார்கள். ஆனால் தேவ ஆசீர்வாதங்களும் தேவ நியாயத்தீர்ப்பும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்ற நிலைப்பாட்டிற்கு நான் வந்துவிட்டேன்.*

*கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை கொண்டு தேவன் நம்மை நமது எதிரிகளிடமிருந்து விடுவிக்கிறார் (2:4-15; 3:15, 19).*

*இறுதியில் மீதியான நீதிமானை தேவ நியாயத்தீர்ப்பு பரிசுத்தமாக்கும் (3:9).*

*தேவன் தமது நியாயத்தீர்ப்பை கொண்டே நமக்கு ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறார். அவர் நம்மோடு வாசம்செய்யும்படி துன்மார்க்கத்தை (துன்மார்க்கரை) அழிக்கிறார்.*

*துன்மார்க்கரை அவர் அழித்து அவர்களுடைய பொக்கிஷங்களை மீதியான நீதிமான்களுக்கு (His faithful remnant) அளிக்கிறார் (2:5-7, 9-10). துன்மார்க்கருக்கு வரும் நியாயத்தீர்ப்பின் முகாந்திரமே நமக்கு ஆசீர்வாதம்.*

*சீயோனுக்கு சொல்லப்பட்ட கடைசி ஆசீர்வாதங்களில் பல (3:14-20) இன்னும் காணப்படவில்லை ஆகவே, இவை கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு காத்திருக்கும்*

*மேசியாவின் தீர்க்கதரிசனங்கள் என்று நாம் அறிந்துகொள்கிறோம். கிறிஸ்து தமது ஜனத்திற்காக இம்மண்ணில் தோன்றி மரித்ததன் மூலம் தேவன் நமது ஆக்கினைகளை அகற்றினார் (செப் 3:15; யோவான் 3:16). ஆனால் இஸ்ரவேலோ தங்களுடைய உண்மையான மேசியாவை இன்னும் அறிந்துகொள்ளவில்லை. வரும் காலங்களில் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டியதே (ரோமர் 11:25-27).*

*இஸ்ரவேலின் சமாதானமும் பாதுகாப்பும் அவர்களுடைய ராஜா அவர்கள் நடுவில் இருக்கும்போது காணப்படும். கிறிஸ்து இவ்வுலகை நியாயந்தீர்க்க வந்து (இரண்டாம் வருகை), இஸ்ரவேலை மீட்கும்போது இவை நிறைவேறும். தாம் உயிர்த்தெழுந்தபின் எப்படி பரலோகத்திற்கு ஏறினாரோ அப்படியே திரும்ப வருவார்; வந்து பூமியில் புதிய எருசலேமை ஸ்தாபிப்பார் (வெளி 21). அப்பொழுது, இஸ்ரவேலை குறித்த தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்.*

## ***இன்றைய பயன்பாடு :***

1. *சில பெயர்களையும், இடங்களையும், சம்பவங்களையும் மாற்றிவிட்டு, கிறிஸ்துவிற்கு முன் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த இதே தீர்க்கதரிசி இன்று நமது சபைகளிலும், துன்மாரின் நியாயத்தீர்ப்பை குறித்தும் நீதிமாங்களின் நம்பிக்கையை குறித்தும் இதே வார்த்தைகளை பிரசங்கித்தால் நீங்கள் எப்படி உணருவீர்கள்? எப்படி ஏற்றுக்கொள்வீர்கள்?*

*With a few adjustments in names and situations, this prophet of 7th century B.C. could stand in our pulpits today and deliver the same message of judgment of the wicked and hope for the faithful.*

*How would you react?*

2. *தமது ஜனங்களின் அநீதியான பாவங்களால் (moral and religious sins) தேவன் அவமதிக்கபடுகிறார் என்று செப்பனியா நமக்கு நினைவூட்டுகிறார். தேவனுடைய ஜனங்கள் தெரிந்தே செய்யும் பாவங்களின் தண்டனையிலிருந்து தப்பிக்கவே முடியாது.*

*Zephaniah reminds us that God is offended by the moral and religious sins of His people. God's people will not escape punishment when they sin wilfully.*

3. *தண்டனை வேதனையளித்தாலும், அதன் நோக்கம் நம்மை கடினப்படுத்துவதல்ல மாறாக நம்மை ரட்சிக்கிறது. துன்மார்க்கம் தலை ஓங்கி நின்று ஜெயிப்பதுபோல் நமக்கு காணப்படும் வேளைகளில், துன்மார்க்கர் மேல் வரும் தேவனுடைய தவிக்க முடியாத நியாயத்தீர்ப்பு நீதிமான்களுக்கு ஆறுதல் அளிக்கிறது.*

*Punishment may be painful, but its purpose may be redemptive rather than punitive. The inevitability of the punishment of wickedness gives comfort in a time when it seems that evil is unbridled and victorious.*

4. *தேவனுக்கு கீழ்படியாமல் போவதற்கு நமக்கு சுதந்திரம் உண்டு ஆனால், அந்த கீழ்படியாமையினால் வரும் விளைவுகளிலிருந்து தப்பிக்கும் சுதந்திரம் நமக்கு இல்லை. தேவனிடம் உண்மையுள்ளோர் வெகு சிலரே, அவர்களை அவர் மறப்பதில்லை. அவர்களை அவர் மறப்பதே இல்லை!*

   *We have the freedom to disobey God but not the freedom to escape the consequences of that disobedience. Those who are faithful to God may be relatively few, but He does not forget them.*

5. *தேவனுக்கு முன்பாக அமைதியாக இருப்பது என்றால் என்ன?*

   - *அவருக்கு முன் நமது பாவங்களுக்காக சாக்குபோக்கு சொல்லாமல் மௌனமாக இருப்பது.*
   - *நாம் பாவிகள் இல்லை என்று மறுதலிப்பதை நிறுத்துவது.*
   - *தேவ ஆக்கினையை ஏற்றுக்கொள்வது.*

   *சில வேளைகளில் ஒருவன் தன குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வழி, மௌனம் (லேவி 10:3; நெகே 5:8; யோபு 6:24).*

   *What does it mean to be silent before the Lord? It may mean that we cease making excuses for our sin, or that we stop denying that we are sinners, deserving of God's wrath. Silence is sometimes viewed as a way of admitting one's guilt (Leviticus 10:3; Nehemiah 5:8; Job 6:24).*